22nd March 1961]

SRI K. ANBAZHAGAN : கிண்டர் கார்டன் முறையில் குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பதை நம் நாட்டிற்கு ஏற்ற விதத்தில் மாற்றி வேறு விதத்தில் கையாண்டு பயிற்சி முறைப்பள்ளிகள் ஏற்படுத்தமுடியும் என்ற கருத்தை கனம் அமைச்சர் அவர்கள் வெளி யிட்டார்களே, அது பற்றி இப்பொழுது ஏதாவது திட்டமிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பரிசீலனையில் இருக்கிறது.

SRI A. VEDARATHNAM : பள்ளி செல்லும் வயதிற்கு முந்திய குழந்தைகளுக்காக நம் மாநிலத்தில் கி டர் கார்டன் முறை, மாண்டிசோரி முறை, ப்ரி-பேஸிக் என்ற மூன்று திட்டங்கள் அமுலில் இருக்கிறதே, அரசாங்க அனுபவத்தில் இதை பரீட்சித்துப் பார்த்ததில் இதில் எந்த முறை சிறந்தது என்று அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொரு முறை யிலும் சில சிறந்த அம்சங்கள் இருக்கின்றன. பணியாற்றக் கூடிய ஆசிரியர்களைப் பொறுத்திருக்கிறது, எந்த முறை வெற்றி பெறுகிறது என்பது. இதில் முக்கிய கஷ்டம், இதில் ஏற்படக்கூடிய செலவு. ஒவ் வொரு குழந்தைகளுக்கும் அதிக செலவு ஏற்படுவதால் லட்சக்கணக்கான குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட பயிற்சி கொடுப்பது என்பது முடியாத காரியம். ஆகவே கனம் அன்பழகன் அவர்கள் கேட்ட கேள்வியின் அடிப் படையில், நம் நாட்டிற்கு ஏற்ற சூழ்நிலையில் தகுந்தபடி எப்படி இந்த முறையை மாற்றியமைத்து எல்லாக் குழந்தைகளுக்கும் எவ்வாறு கொடுக்க முடியும் என்பது பரிசீலனையில் இருக்கிறது.

Small scale Industries (Aids)

*1002 *Q.*— SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் Small-scale Industries-களுக்கு State Bank கள் மூலம் என்னென்ன உதவி செய்யப்படுகிறது ?

(இ) கடன் தொகை எவ்வளவு வரை கொடுக்கப்படுகிறது ?

(உ) அப்படி கடன் கொடுத்தால், என்னென்ன நிபந்தனைகளின் பேரில் கொடுக்கப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*), (*b*) & (*c*) A copy of the pamphlet issued by the State Bank containing necessary particulars in respect of the Pilot Scheme is placed in the Library of the Madras Legislature. The scheme has been extended to all branches of the Bank. It is understood that the State Bank is bringing out a revised pamphlet which may be obtained from them for further particulars.

Political sufferers (relief)

* 1003 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received recently any petition from the General Secretary, Madras District Political Sufferer's Conference, regarding relief to political sufferers; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) As adequate assistance to political sufferers is being already rendered no further action was considered necessary.

[22nd March 1961

SRI T. S. RAMASWAMY : May I know whether the Government Order granting educational concession to children of political sufferers has not been implemented this year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may put a separate question to the Hon. Minister for Education.

SRI V. K. KOTHANDARAMAN : இந்தத் தியாகிகளின் குடும்பங்களுக்கு எப்படி இலவசக் கல்விக்காகவேண்டி சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறதோ அதே போன்று மருத்துவ சலுகையும் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறதா ? அது குறித்து சர்க்காரின் அபிப்பிராயம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது விஸ்தரிக்கப்பட்டிருக்கிற வசதிகளோடு மேற்கொண்டும் புதிய வசதிகள் செய்வதாக இப்பொழுது உத்தேசம் ஒன்றுமில்லை.

Agricultural college

* 1004 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சாத்தனூர் அணைக்கட்டுக்குப் பக்கத்தில் விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATASALAM : No, Sir.

* 1005 Q.—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆடுதுறையில் விவசாயக் கல்லூரி **1961–62**-ல் ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

(இ) அதற்காகத் தனியார் துறையில் நிலம் இனாமாக கொடுப்பதாக விண்ணப்பம் ஏதேனும் வந்ததா?

(உ) அதன்மேல் எடுத்த முடிவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Yes, at Kabistalam in Thanjavur district.

(*c*) No decision has been taken yet.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஆடுதுரையில் ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று நீண்டகாலமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. அதை ஆரம்பிப்பதற்கு நிலம் தருவதாக, கபிஸ்தலத்திலிருந்து திரு. கருப்பைய மூப்பனார் அவர்கள் மனுக்கள் போட்டிருப்பதாக பத்திரிகைகளில் பார்த்தோம். தவிர உற்பத்தித் திட்டங்கள் போன்றவைகள் அமுலாகும் பிரதேசங்களில், அப்படிப்பட்ட ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்துவது அவசியம். கனம் அமைச்சர் அவர்கள் ரஷ்யாவிற்குச் சென்று அங்கு இப்படிப்பட்ட விவசாயக் கல்லூரிகளில் ஏராளமான மாணவர்கள் பயிலுகிறார்கள் என்று சொன்னார். ஆகவே அங்கு விவசாயக் கல்லூரி அமைக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கபிஸ்தலத்தில் நிலம் அளிக்க முன்வந்தது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதென்று சொன்னேன். நிலம் மட்டும் போதாது, ஒரு விவசாயக் கல்லூரி அமைப்பதற்கு. தஞ்சையில் வேண்டுமென்றால், பக்கத்திலுள்ள சிதம்பரத்தில் அண்ணாமலை யூனிவர்ஸிட்டியில் ஒரு விவசாயக் கல்லூரி இருக்கிறது. மூன்றாவது திட்டத்தில் மற்றும் ஒரு கல்லூரி அமைக்க திட்டமிருக்கிறது. எங்கு அமைப்பது, மதுரையில் அமைப்பதா, தஞ்சாவூரில் அமைப்பதா, வேறு எங்கே அமைப்பது என்று பரிசீலனை செய்து முடிவு செய்யப்பட வேண்டிய விஷயம்.